★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 3உ புதன் (16—5—56) ★ ★ வெளியீடு: வைகாசி 4உ வியாழன் (17—5—56) [இதழ் 286

உரிமைக்குப் போராடும் மற்றொரு மொழி!

சிந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள், தங்கள் மொழியையும் அரசாங்க மொழியாகக் கொள்ள வேண்டும் என்று கோருகின்றனர். இதுவரை 14 மொழிகள் அரசாங்க மொழிப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 15-வது மொழியாகச் சிந்தியைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது அம்மக்களின் கோரிக்கையாகும். சிந்தி போலிசபையில், அரசாங்க மொழிக்

(1-ம் கலம் பார்க்க)

வேலையில்லாப் பிரச்சினை தீருமா?

இரண்டாவது திட்டத்தில் வாய்ப்பு கிடைக்குமா?

புதுடில்லி, மே 15—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் புதிதாக வேலை செய்யும் வயதை அடைகிறவர்கள் ஒரு கோடி பேர்; ஏற்கனவே வேலையின்றியிருப்போரின் எண்ணிக்கை 53 இலட்சம்; இது விவசாயத்துறை தவிர்த்த மதிப்பீடு. திட்டப்படி விவசாயம் தவிர ஏனையத் துறைகளில் 80 இலட்சம் புதிய வேலைகள் கிடைக்குமென எதிர்நோக்கப்படுகிறதாம்.

எனவே, 153 இலட்சம் புது வேலைகளுக்கு வழி ஏற்பட்டாலன்றி வேலையில்லாப் பிரச்சினை தீராது என்ற நிலைமை நிலவுகிறது.

3 கோடி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை

எவ்வளவு தெரியுமா?

இரண்டாம் திட்டத்துக்கு சர்க்கார் துறைச் செலவு ரூ. 4800 கோடி; இவற்றில் சென்னை மாநிலத்திற்கென ரூ. 173 கோடி; புதுச்சேரிக்கு 4 கோடி 80 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது!

சென்னை மாநிலத்தில் மக்கள் எண்ணிக்கை சுமார் 3 கோடி! நாட்டின் மக்கள் தொகையில் பன்னிரண்டில் ஒரு பங்கு.

1876-ம் ஆண்டு நாடகச் சட்டம் செல்லாது

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு

இலக்குமணபுரி, மே 15

1876-ம் ஆண்டில் உருவான நாடகச் சட்டம் இப்போதுள்ள இந்திய அரசியல் சட்டத்திற்கு முற்றிலும் முரணானது என்று அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் ஜஸ்டிஸ் கித்வாய் அவர்களும், முல்லா அவர்களும் தீர்ப்புக் கூறினர்.

1876-ம் ஆண்டு நாடகச் சட்டத்தின் கீழ்த் தண்டிப்பதற்கென நீதி மன்றத்திற்குக் கொண்டு வரப்பட்ட நால்வர் விடுதலை செய்யப்பட்டனர்.

உரிமைக்குப் போராடும்...

(மேல்கட்டத் தொடர்ச்சி)

கமிஷன் சார்பில் இம்மாதத் துவக்கத்தில் பேசிய டாக்டர் சுனிதி குமார் சாட்டர்ஜீ, இம்மொழி நாட்டின் 15-வது அரசியல் மொழியாகச் சேர்த்துக் கொள்ளப்படும் என்று கூறினர். ஆனல் இதுபற்றி எம்முடிவும் செய்யப்படவில்லை என்று அந்தக் கமிஷன் தெரிவித்திருக்கிறது. அரசாங்கக் கமிஷனைச் சேர்ந்தவர்களிடையில் இத்தகைய கருத்து வேற்றுமை! இதுதான் இன்றைய நடுநிலைமை அரசாங்கத்தின் போக்கு!

****

திராவிட முன்னேற்றக் கழக

2-வது மாநில மாநாடு

★ திருச்சியிலே தீரர்கள் திரள் திரளாய்ச் சேர்ந்திருக்கின்றனர்!

★ 'வள்ளுவர் நகரம்' வாயார—மனமார 'வருக வருக' என அழைக்கிறது!

★ மே 17, 18, 19, 20 நான்கு நாட்களும் அனைத்திந்தியாவிலிருந்தும் ஆவலோடு எதிர்பார்க்கும் புரட்சி தினங்கள்!

★

நம் கழகக் காவலராம் நாவலர் இரா. நெடுஞ்செழியன் தலைமை வகிக்கிறார்.

கழகத்தின் பழம்பெருந் தோழராம் ஜி. பி. சோமசுந்தரம் திறந்து வைக்கிறார்.

ஓவியக் கண்காட்சியாம் உயர்ந்த பகுத்தறிவுச் சாலையை நம் அருமை துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் திறந்து வைக்கிறார்.

முதல் நாள் திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசை நம்மை இன்ப வெள்ளத்திலாழ்த்தும்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களோ, இசைக் கலத்தில ஏற்றி, இன்பக் கடலில் உலாவரச் செய்வார்.

இசைமுரசு அனீபா, இசைச் செல்விகள் கஸ்தூரி, செல்வா இசை மழை பொழிவர்.

மாநாட்டில் 'புது வெள்ளம்' பாய்ச்சி, 'மணி மகுடம்' சூட்டி மகிழ்விக்கப்போகிறார்கள்—நடிகச் செலவர்கள் எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி குழுவினர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரோ, நமக்காக 'அட்வகேட் அமரன்' வாதிடச் செய்து, 'சுமைதாங்கி' நிலை போக்க இருக்கிறார்கள்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், அன்பு நெறி வளர்த்த புத்தபிரான் வாழ்வை, வில்லுப் பாட்டால் விளக்க இருக்கிறார்.

கழகத்தின் பழம்பெரும் மூதாட்டி—பகுத்தறிவுலக ஔவைப் பாட்டி மூவலூர்-இராமாமிர்தத்தம்மையார் அவர்களுககு விருது வழங்கப் போகிறார் நம் அண்ணா அவாகள்.

★

16-ம் நாள் காலையில் திருச்சி சந்திப்பில் திராவிடத்தின் எழுச்சியை, புரட்சியைச் சந்திக்கலாம்—நம் நாவலரை வரவேற்க, திராவிடமே கொடியேந்தி, காத்து நிற்கும்!

பிறகோ, பொதுக்குழு கூடி, புதுப்புது திட்டங்கள் தீட்டும்.

17-ம் நாள்—சிந்தாமணியிலிருந்து சிங்கத் திராவிடரின் ஊர்வலம்—நாவலர் நெடுஞ்செழியனர் நடுநாயகமாக விளங்குவார்—விழியுள்ளோர் காணவேண்டிய காட்சி—செவியுள்ளோர் கேட்கவேண்டிய முழக்கம்—உரிமை உணர்வு கொண்டோர் அனைவரும் கலந்துகொள்ள வேண்டிய இலட்சிய ஊர்வலம்!

மாநாட்டுப் பந்தல் முகப்பில், அரிமாக்கள் இரண்டு அணைப்பிலே உயர்ந்து பறந்திடும் இலட்சியக் கொடியை ஏற்றுவிப்பார் பொதுச்செயலாளர்.

இயக்கத்தின் உயிரும் உடலுமான நம் கழகத்தின் முன்னணி வீரர்கள், வீராங்கனைகள்—கே. ஏ. மதியழகன், காஞ்சி-கல்யாணசுந்தரம், அருண்மொழி, கி. மனோகரன், வி. ஜி. இராமையா, தில்லை-வில்லாளன், க. அன்பழகன், என். எஸ். இளங்கோ, மு. கருணாநிதி, சத்தியவாணிமுத்து, கண்ணதாசன், சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, அரங்கண்ணல், ப. உ. சண்முகம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் முறையே கருத்து விருந்து அளிகக இருக்கின்றனர். அவர்கள் உலகத்தையே மககள் முன் கொண்டுவந்து நிறுத்த இருக்கின்றனர்.

அறிஞர் அண்ணா, இறுதி நாளில், திராவிடத்தின குரலாக இருந்து பேசப் போகிறார்.

★

திராவிடத்தின் எதிர்கால நல்வாழ்விற்கான திட்டங்களைத் தீட்டப் போகிறார்கள்.

ஓவியக் காட்சி மூலம், பகுத்தறிவு நெறி பரப்பப்போகிறார்கள்.

விஞ்ஞான விநோதங்களைக் காட்டி நம்மை விஞ்ஞானத்தின் விருந்தினர்களாக ஆக்கப் போகிறார்—தி. மு. க. மாநில மாணவர் கிளை அமைப்பாளர் பொன்னுவேல்.

இன்னும், ஏட்டிலும, சொல்லிலும் சுருங்கிய நிலையில் சொல்லித் தெரிவிகக இயலாத சிறப்புகள் உண்டு.

★

திராவிடராய் பிறந்தவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டிய பெரும்விழா!

அன்பில் தர்மலிங்கம் ஆர்வத்தோடு அழைக்கிறார்.

மணியும், முத்துவும் ஏற்பாடுகள் அத்தனையும் முடிந்துவிட்டன—இதோ தொடங்கிவிட்டன நிகழ்ச்சிகள் எனகிறார்கள்.

ஷரீப், குத்தூஸ், கைலாசம் ஆகியோர் தொண்டர் படையினரை நடத்தி, வருவோரின் நலன்களைக் காத்திட உழைக்கின்றனர்.

★

★ வாரீர் தோழர்களே! வந்து, திராவிடத்தின் வாழ்விற்காக வகுக்கும் வழி நடப்பீர்!

★ திருச்சி அழைக்கிறது! தீரரே, வாரீர்! வீரரே, வந்து சேரீர்!!

****

இந்தியைப் பரப்ப இன்னொரு புதிய வழி!

'மாதிரித் திட்டம்' வகுத்து இரயில்வே நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்!

புதுடில்லி, மே 16—

இரயில்வே ஊழியர்களுக்கு இந்தியைக் கற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நாடெங்கும் உள்ள இரயில்வே நிலையங்களுக்குக் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தி தெரியாத பகுதிகளில் உடனடியாக இந்தி வகுப்புகள் தொடங்க வேண்டுமென்று இரயில்வே போர்டு கூறி, இதற்கான மாதிரித் திட்டம் வகுத்து அனுப்பியிருப்பதாகவும், இதற்கான வேலை விரைந்து நடைபெற்று வருவதாகவும் தெரிகிறது.

எல்லாப் பிரிவு இரயில்வே ஊழியர்களிடையேயும் இந்தி தெரியாதோரின் எண்ணிக்கையைக் கணக்கிடும்படி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

60 இலட்சம் டன் உணவு தானியம்

இறக்குமதி செய்யப்படுமாம்

புதுடில்லி, மே 15—

தானியக் கையிருப்பு குறைந்துவிட்ட காரணத்தினல் 2-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முற்பகுதியிலேயே 60 இலட்சம் டன் உணவு தானியம் இறக்குமதி செய்ய நிர்மானித்துள்ளதாக திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ரூ. 450 கோடிக்கு மேலும் வரி?

புதுடில்லி, மே 15—

இன்றைய நிலையிலுள்ள வரித் திட்டப்படி செலவு போக மாநில, மத்திய சர்க்கார்களிடம் மீதமுள்ளது ரூ. 350 கோடி; புதிதாக ரூ. 450 கோடிக்கு வரி போடுவார்களெனத் தெரிய வருகிறது.

100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனராம்!

அல்ஜியர்ஸ், மே 15—

அல்ஜீரியா முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் பாதுகாப்புப் படைகளோடு ஏற்பட்ட மோதுதலின் காரணமாகச் சுமார் 100 தீவிரவாதிகள் பலியாயினர்.

நேபாளத் தலைநகரில் விமான விபத்து

16 பேர் மாண்டனர்

காட்மண்டு, மே 15—

'இந்திய ஏர்லைன்ஸ்' விமானம் ஒன்று நேபாளத் தலைநகராகிய காட்மண்டு விமான நிலையத்தில் இறங்கும்போது, மோதி எரிந்துவிட்டதாம். அதிலிருந்த 28 பேர்களில் 16 பேர் இறந்தனரென்றும், 8 பேர் சிகிச்சை பெறுவதாகவும், 4 பேர் நிலை என்னவென்று தெரியவில்லையென்றும் அறிவிக்கிறது. இந்த விமான நிலையத்தில் ஏற்பட்ட முதல் விபத்து இதுதானும்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—5—'56 புதன்

வெற்றி முரசு!

ஆட்சியோ, அன்னிய ஆங்கிலேயரிடத்தில்! தங்கள் ஆதிக்கத்திற்கு ஆட்டங் காணாது பாதுகாத்துக்கொள்ளுவதையே, அவர்கள் பெரும் பொறுப்பாகக் கொண்டிருந்தனர். அதற்கான வகையில் எச்சரிக்கையாக நடந்துவருவது ஒன்றே போதுமானது என அவர்கள் இருந்துவந்தனர்.

ஆனால், உள்நாட்டு நிர்வாகமோ, பெயரளவிற்குத்தான் வெள்ளைத் துரைத்தனமாக இருந்ததே அல்லாது, செயலாற்றும் பொறுப்பு முழுவதும் ஆரியத்தின் கையிலேயே சிக்கிக் கிடந்தது.

ஆங்கில ஆட்சி முறைக்கு, மேற்கொள்ள வேண்டிய நிர்வாகத் துறைக்கு, அடிப்படை அமைத்துத் தந்தது ஆரியம்!

ஆங்கில ஆட்சி, ஆரியத்தின் சொல்வழிதான் ஆடிக் கிடந்தது என்பதற்கு, இன்றும் நடைமுறையில் இருந்துவரும் 'இந்து சட்டம்' ஒன்றே போதிய புறச்சான்றாகும்.

ஆரிய மந்திரங்களுக்கு ஆலயங்களில் உறையும ஆண்டவர்கள் அடக்கம்! மதச் சடங்குகளில், ஆரியப் புரோகிதர்களின் ஆதிக்கம்! சமூகக் கண்ணோட்டமோ, ஆரியர் வகுத்த ஏற்பாட்டிற்கு அடிமை! அரசியல் பீடத்தில் அமர்ந்திருந்த ஆங்கில துரைத்தனமோ, ஆரிய 'அறிவுரை' வழி இயங்கும இயந்திரம!

இப்படி, துறைகள் அனைத்திலும், ஆங்கில துரைத்தனத்தைக் கைப்பாவையாக்கிக் கொண்டு, திராவிடத்தைசீரழிக்கும் வகையில் கோலோச்சி வந்தது, ஆரியம்!

இந்த ஆதிக்கபுரியை அழித்தொழிக்க, தகர்த்துத் தரை மட்டமாக்க, அடிமையாக்கப் பட்டுக் கிடந்த திராவிடரை மீண்டும் விடுவித்து, அவர்கள் வாழ்ந்த நிலைக்கு மறுமுறையும அவர்களை உயர்த்தி நிறுத்த, திராவிடஇன மக்களிடை சமத்துவ வித்திட்டனர் டாக்டர் நாயரும், சர் தியாகராயரும்!

அந்தக் காலக் கட்டத்தில் நாட்டு மக்களை நலிவடையச் செய்துவரும் பெருங்கேடுகளாக இருந்தவை, ஆங்கிலேய ஏகாதிபததியமும் — ஆரியமும ஆக இரண்டு பெரும சக்திகளேயாகும!

அவ்விரு பெருங்கேடுகளின் ஆற்றலை மிகுதியாக்கியது, அறியாமையிலும், தனது வலிவு உணராத நிலையிலும், உறங்கிக் கிடந்தத் தன்மையிலும் திராவிடப் பெருங்குடி மக்கள் இருந்து வந்தது!

திராவிடப் பெருங்குடி மக்களைப்பற்றி இருந்த அறியாமையை அகற்ற, கோழைத் தனத்தை விரட்ட, உறக்கத்தை ஒழிக்க, உண்மையாக ஆதிக்கம செலுத்திவந்த ஆரியத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினர், டாக்டர் நாயரும்—சர் தியாகராயரும்!

ஜாதி ஒழிய வேண்டுமென்றனர்; அனைவரும் சமம் என [illegible]னர்; பிறப்பினால் உயர்வு--தாழ்வு பேசுவது பித்தலாட்டம் என்றனர்; சமத்துவம தழைத்தோங்க வேண்டுமென முழங்கினர்; அனைவரும் வாழ அனைவருக்கும் சமசந்தர்ப்பம--சமநிகர் வாய்ப்பு தேவை என்றனர்; இவ்வருங் கருத்துக்களையே, அவ்விரு பெருந்தகைகளும, இவ்விருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி இடையில், தாங்கள் தொடுத்த சமத்துவப் போரின் மூலக் கோட்பாடுகளாகக் கொண்டனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் புத்தர் பெருமானுக்குப் பிறகு. இம்மண்ணில்தோன்றிய இரண்டாவது பெரும் சமுதாயப் புரட்சிவீரர்களாகத் தோன்றி செயல்பட்டவர்கள் டாக்டர் நாயரும், சர் தியாகராயருமே யாவர். அவர்களுக்கு நமது நன்றி கலந்த வணக்கம.

ஆரிய ஆதிக்கத்திற்கு எதிராக, அக்காலக் கட்டத்தில் அவர்கள் மேற்கொண்ட சமூகப் போராட்டத்தை அவ்விரட்டையர்கள் துவங்காமல் இருந்திருப்பார்களே யாயின், அந்த குறிப்பிட்ட இலட்சிய வெற்றிக்காகப் போராடிவரும நாம், மேலும் எத்தகைய பெரும் எதிர்ப்புக்கு ஆளாகி இருப்போம என்பதையும், நமது பணியின் பாரமும எவ்வளவு கூடுதலாக இருந்திருக்குமென்பதையும் நாம சிந்திகும பட்சத்தில், டாக்டர் நாயரும, சர் தியாகராயரும் சேர்ந்து மேற்கொண்ட பணியின் சிறப்பையும, அவர்கள் உழைப்பால் நமது பணியின் பளுவு பன்மடங்கு குறைந்து இருப்பதின் உண்மையையும, நமமால் விளக்கமாக அறிந்து கொள்ளுவது சாத்தியமாகும.

ஆரிய ஆதிககத்திற்கு எதிராக அவ்விரட்டையர்கள் போர் முழக்கம் செய்த அக்காலத்தில், ஆதிக்க வகுப்பினரிடமிருந்து அவர்களுககு ஏற்பட்ட எதிர்ப்புப் போன்றதோர் எதிர்ப்பு, இக்காலத்தில் நமக்கு ஏற்படடிருக்குமானல், நாம அதனைத் தாஙகி, நிலைதது நின்று பணியாற்ற முடியுமா என்பதுகூட ஐயத்திறகுரியது என்பர், அக்காலத்தில் ஆரியத்தால் அவர்கள்பட்ட அலலல்களை ஆதியோடு அந்தமாக அறிந்திருப்போர்!

நாம் இன்று மேற்கொண்டுள்ள பெரும் பணிக்கு, அவ்விரு பெரியவர்களின் அக்கால முயற்சி, நிலத்தைப் பண்படுததித் தந்தமை போலாகும். எனவே, அப்பெரியவர்களின் திருநாமம திராவிட இனத்தின் வரலாற்றில் முதற்கட்டத்தில் பொன்னான முத்துக்களால் பொறிக்கததக்கதாகும். அவர்களுக்கு நமது நனறி—வணக்கம.

டாக்டர் நாயரும், சர் தியாகராயரும மேடுபள்ளஙகளை நிரவல் செய்து, பொன்னும விளையும போக பூமியாக பண்படுத்திய நிலத்தல், பொறுக்கு விதையை விலதத்து, தக்கவகையில் நீர் பாய்ச்சி திராவிடப் [illegible]ளைப் பாதுகாத்து வளர்த்து வந்த பெரியார் அவர்களுக்கும் நமது நன்றி கலந்த வணக்கம்.

தாம் வகுத்துக் காட்டிய இலட்சியப் பாதையிலிருந்து பெரியார் அவர்கள் வழிவிலகிச் சென்றது கண்டு மனங்கலங்கி, பிறந்த குடும்பத்தைவிட்டு கண்ணீர்த் துளிகளாக வெளியேறினோம்; நமக்கென வேறு வீடு அமைத்துக் கொண்டோம்.

முன்னுள் குடுமப மாளிகை போல், நமது புதிய சிறு வீடு எழில் உள்ளதாக இல்லாது இருக்கலாம்; இருந்தாலும, இலட்சிய ஒளியை அணைய விடாதது மட்டுமன்றி, இலட்சிய ஒளியைக் கூடுதலான ஒளியுடையதாக்கும் திருப்பணியில் ஈடுபட்டுவரும் ஆற்றல் மிக்க ஆயிரமாயிரம் திராவிட வீரர்களைக் கொண்டு விளங்கும பாசறையாக நமது சிறு வீடு இருந்துவருகிறது என்பது, நூற்றுக்கு நூறும உண்மையே அல்லாது, வெறும் தற்புகழ்ச்சி அல்ல—முக்காலும் அல்ல!

1949-ம ஆண்டு ஒன்பதாம் திங்கள் பதினேழாம நாள், அதிகாரபூர்வமாக திராவிடப் பெருங்குடி மக்களின் நாட்டு விடுதலையின் தனிக் குடும்பமாக உருவெடுத்த நமது முன்னேற்றக் கழகம், திராவிட இன விடுதலைக்காக—உரிமை காப்புக்காக—அநீதி ஒழிப்புக்காக—துன்பத் துடைப்புக்காக மேறகொண்ட பணிகள், தொடுத்த போர்கள், அடக்குமுறைகளுக்கு ஆளாகி பட்ட அல்லல்கள், தாஙகிக் கொண்ட பெரியார் பெரும் படையினரின் வசைகள், பெரியதோர் வரலாற்று ஏட்டில் கூட அடங்கிவிடக்கூடியதன்று!

நமது செயல்முறையின் காரணமாகப் பட்ட கஷ்ட நஷ்டங்களும, அனுபவித்தத் தொல்லைகளும் எந்த அளவு கூடுதலாக இருந்ததோ, அதே அளவு கூடுதலாகவும, அதற்குப் பனமடங்கு மேலானதாகவும, நமது கழக இலட்சியம, நாட்டவர் இல்லந்தோறும நல்லவா உள்ளந்தோறும குடியேறுவதில் முழு வெற்றி கண்டிருக்கிறது. இதைக் கருதும பொழுது, இந்த வெற்றிக்கு நாம பட்ட கஷ்ட நஷ்டமும, ஏற்ற இடுக்கணகளும மிக மிகக் குறைந்த விலையாகும என்ற உணமை, நமமைப் புளகாங்கிதம் அடையச் செய்கிறது; அதுவே, மேலும நமமை, இலட்சிய வெற்றிக்காக ஊககுவிக்கும் அருமருந்தாகவும அமைந்துவிடுகிறது.

தனிக் கழகம் கண்டுவிட்டதால், இரணடொருவர் தாக்கித் திரிவது போலவும, வசை பாடி எழுதி மகிழ்வது போலவும், நமது கழகம சரிந்துவிடவில்லை. ஏறத்தாழ இரணடாண்டுக காலத்திற்குள்ளாக, கழகத்திற்கான தலைமை நிலையத்திற்கு, ஐமபதினயிரம ரூபாய் மதிபுடைய 'அறிவகம்' கழகததின் சொந்த மாளிகையாக ஆககப் பட்டது -- திராவிடப் பெருங்குடிமக்களால்! இது, கழகத்திறகுக கிடைத்த மகததான முதல வெற்றி!

முதல் மாநாடு—நமது கழகததின் நண்பர்—வழிகாட்டி—பேராசிரியர் எனததகும உயரிடத்தில் உள்ள பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமையில், சென்னையில் சீர்சிறப்புடன் 1951-ம ஆண்டு டிசமபர் திங்களில் மூனறு நாள் திராவிட இன விடுதலை முழக்கத்தை முழங்கியது; இலடசக்கணக்கல் திராவிட இளைஞாகளும் தாய்மார்களும் மாநாட்டில் கலந்துகொண்டு இலட்சியத் தெளிவும் — உறுதிப்பாடும் பெற்றனர்.

நமது கழகத் துவக்கம், திராவிடத்தின் அரசியல் வரலாற்றில் எப்படி ஒரு திருப்பு முனையோ, அதேபோன்று, அதில் எவ்வகையிலும் குறைவில்லாது, முதல் மாநாட்டில் மேற்கொண்ட ஒரு முக்கிய செயல் முறையும் தனிச் சிறப்பு வாய்ந்த சரித்திரத் திருப்புமுனையாகும்.

சிறப்பு வாய்ந்த அத்திருப்பு முனையின் விளைவில், எதிலும ஏமாற்றமும் வெற்றியும் கலந்திருப்பது போலவே, ஏமாற்றமும உண்டு; எதிர்பார்த்ததற்கும் மிகுதியான வெற்றியும் உண்டு.

திராவிடத் தனி நாடு கோரிக்கையை இலட்சியமாக ஒப்பி, எழுத்து மூலம் வாக்குறுதி அளிப்பவர்களை பொதுத் தேர்தலில் நமது கழகம் ஆதரிப்பது என்ற முடிவை எடுத்தது; அதைத்தான் 'திருப்புமுனை' எனக்குறிப்பிடுகின்றோம.

காங்கிரஸ் கட்சியை எதிர்த்து மக்கள் சபைக்குப் போட்டியிட்டவர்கள் சிலரும், மாகாண சட்டசபைகளுக்குப் போட்டியிட்டவர்கள் பலரும், நமது கழகம் விதித்த இலட்சிய நிபந்தனைக்கு ஒப்பி வாக்குறுதியில் கையொப்பமிட்டனர். அவர்களில் பலர், தேர்தலில் காங்கிரஸ் கட்சியை முறியடித்து, நமது கழக ஆதரவு பலததால் வெற்றியும் பெற்றனர். இது கண்டு, நமது உள்ளம் பூரிக்கவும செய்தது.

மகிழ்ச்சிக்கிடையே சிறு மனப் புழுக்கம! பூரிப்புக்கு மத்தியில் துளி வேதனை!

வாக்குறுதி அளித்தவர்களிடமிருந்து, வாக்களித்த வண்ணம் நடந்துகொள்ளும் நன்முறையை, எதிர்பார்க்கும உரிமை நமது கழகத்திறகு உண்டு. அதேபோன்று, வாககளித்தலை உயர்ந்த அறமாகக் கொண்டு, வாக்களித்தவண்ணம் செயல்பட வேண்டும என்ற உறுதிப்பாடு, வாக்களித்தவர்களுக்கு இருக்க வேண்டியது கட்டாயமாகும். ஆனல், இரண்டொருவர், வாககளிப்பது என்பதை வெறும அரசியல் நிலாச் சோறாகக் கருதி, அரசியல் ஒழுக்க அறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகத் தவறிவிட்டனர்.

அவர்கள், தங்கள் நடத்தையால் இழந்துவிட்டது கண்ணியம! பொதுமக்கள் நல்லாதரவு! நாம இழந்தது ஒன்றுமில்லை—பெறற ஏமாற்றமும, இன்றுள்ள அரசியல் உலகில் மிக மிகச் சாதாரணம!

எப்பொழுதும நம்மைத் தூற்றி மகிழ்வதையே ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருக்கும் இரண்டொருவர், இவ்வகையில் நாம பெற்ற சாதாரண ஏமாற்றத்தை ஒரு புகலாகக் கொண்டு, நமது கழகத்தின் செயல் திறத்தை, எப்பொழுதுமபோல் கொஞ்சம் குரலை உயர்த்தி, நிந்திக்கத தொடங்கினர். அந்த வெள்ளறிவாளர்களும், நமது தேர்தல் நிபந்தனையின் அடிப்படையில் தேங்கி இருக்கும் ஒப்பற்ற கருததை உணர்ந்து கொண்டிருப்பார்களானல், நமமைத் தூற்றவே முன்வந்து இருக்க மாட்டார்கள் என்பது முக்காலும் உறுதியாகும். எப்பொழுதும வசை பாடுவதை எழுததுப் பணியாகக் கொண்டிருப்பவாகளுக்கு அல்ல இவ்விளக்கம; அவசரத்தில் குறைகூறும இயல்பு கொணடோருக்கே தரப்படுகிறது, இவ்விளக்கம்.

திராவிட இனம் என்றாலே, 'இன வேற்றுமை பேசுவது கூடாது' எனபோதிப்பவர்கள், திராவிடர் இயக்கமென்றால், 'அதற்கு ஆதரவு எங்கே இருக்கிறது' எனக் கேட்கும் மதிவல்லபர்கள், திராவிடர் என்றாலே, 'ஆரியமாவது-திராவிடமாவது; இரண்டும்பித்தலாட்டம்' எனப் புகலும் பேரறிவாளர்கள் ஆகிய அனைவரும் வெட்கித் தலைகுனியும் வகையில், நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு இருந்தால் அல்லாது, காங்கிரஸ் கட்சியை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடுவது முடியாது என்ற ஒரு புதிய நினைப்பை, நமது வாக்குறுதி நிபந்தனை, நாட்டு மக்களிடம் உருவாக்கி இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தப் பின்னணியில் தான், சென்ற தேர்தல் காலத்தில் உருவாக்கிச் செயல்படுத்திய வாக்குறுதி நிபந்தனையின் விளைவாக, நமது கழகத்திற்கு ஏற்பட்டுள்ள பலாபலனை மதிப்பிட முன்வர வேண்டும். அவ்வகையில் மதிப்பிடுமபொழுது, நமது போக்கினல் நமக்குக் கிடைத்துள்ளது--அதுவும் மிக மிக எளிய உழைப்பில் நமது கழக வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ளது, எத்தகைய மகத்தான ஆக்கம் என்பதை நாம் உணர்ந்து மகிழ்வது இயலும்.

நமது இலட்சிய வாக்குறுதி நிபந்தனையை ஒப்பி கையொப்பமிட்டவர்களில் இரண்டொருவர், அப்படி ஒரு நிபந்தனைக்குத் தங்களைத் தமமிச்சையாக உள்ளாக்கிக்கொள்ளாதது போலவே மதித்து நடந்து கொள்ளவும், தவறிழைக்கவும் துணிந்தனரேனும், எஞ்சிய பற்பலர் ஒன்ருக இணைந்து, திராவிட சட்டசபைக் கட்சி எனச் செயல்பட முனைந்தது, நமது தாய்நாட்டு அரசியல் வரலாற்றில் இடம் பெறத்தக்கதாகும். அவ்வமைப்பு, நமது இலட்சிய வாக்குறுதிக்குக் கிடைத்த மற்ருெரு வெறறியாகும். அரசியல் ஒழுக்கக் கேட்டையே உருசி பார்த்து வரும் நமது நாட்டில், அரசியல் துறையில் கூடுமானவரை அறநெறிக்குப் பாதை அமைத்துத் தந்த திராவிட சட்டசபை கட்சியினர், என்றும் மறக்கத் தகுந்தவர் அல்லர்.

திராவிட மக்களைக் கப்பிக் கொண்டிருக்கும் ஆரிய இருளை அகற்றுவது, நாட்டை விடுவிக்க முயலுவது, பகுத்தறிவை ஊட்டுவது என்ற முனைப்பில் கருத்து விளக்கம் தருவது என்ற ஒன்றை மட்டுமே செயல்முறையாகக் கொண்டு தீவிரமாகப் பணிபுரிந்து வந்ததில், திராவிட மக்கள் தினந் தினம் அனுபவித்துவரும் வாழ்க்கைத தொல்லைகளைக் குறைப்பதில் தன்னல் இயன்ற அளவு நேரடியாகத தொடர்பு ஏற்படுத்திப் பணியாற்றுவது என்ற ஒப்பற்ற, இன்றியமையாது தேவைப்படும புதிய முறையை முழு மனதுடன் கடைப்பிடிக்க நமது கழகம் துணிந்தது.

கைத்தறியாளர் துன்பந் துடைக்க, கைத்தறி ஆடைகளையே ஆடவரும் பெண்டிரும் அணியவேண்டும் என்ற ஒரு மனப்போக்கை உருவாக்க நமது கழக முன்னணி வீரர்கள் கைத்தறி ஆடைகளைச் சுமந்து சென்று, பெரும்பாலான ஊர்களில் தெருத் தெருவாகக் கூவி விற்றனர். கைத்தறி ஆடைகளுக்குப் புதிய

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பை ஏற்படுத்துவதின் மூலம், நெசவாளர்களை மரணத்தின் பிடியிலிருந்து காப்பதில் கழகம் கணிசமாக வெற்றி பெற்று இருக்கிறது.

அதே நேரத்தில், பெரும் புயலுக்குப் பலியானவர்கள் போக, அவதிப்பட்டுக் கிடந்த எஞ்சியவர்களுக்கு, மானங் காக்கத் துணி அளிக்க, கால் இலட்சத்திற்கு மேல் கால் கால் அணுவாக நிதி திரட்டி, அவ்வளவிற்கும் கைத்தறி ஆடைகளாக வாங்கி, அவைகளைக் காங்கிரஸ் ஆட்சியிடமே ஒப்படைத்து, புயலால் பாதிக்கப்பட்டவர்களின் மானங் காத்தும், நெசவாளர்களுக்கு வாழ்வளித்தும் புகழ்படப் பணியாற்றி இருக்கிறது, கழகம்.

செய்த உதவி மிக மிகக் குறைவு—ஆனாலும், அந்த உதவியும் கழகத்தின் நிலைக்கு மீறியதாகும்.

செய்த உதவி அல்ல கருதப்பட வேண்டியது; திராவிட மக்களின் துயர் துடைக்க வேண்டியது, அவர்கள் நலனுக்காக நடத்தப்பெறும் கழகத்தின் நீங்காக் கடமையாகும் என்று கொண்டு, துன்பம் துடைக்க முன்வந்த நமது கழகத்தின் தூய்மை உள்ளந்தான், அது செய்த சிறு உதவியும் மதிப்பிடத்தக்கதாகும்.

திராவிட இனச் சிறுர்களைக் கல்லாமலே ஒழித்துக் கட்ட மிகத் தந்திரமாக—எதேச்சாதிகாரமாகத் திணிக்கப்பட்ட ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்ட ஒழிப்பு, நமது கழக முயற்சிக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும். நமது கல்வித் திட்ட எதிர்ப்பு, கல்வித் திட்ட ஒழிப்போடு நின்று விடாது, அவரையே ஆட்சியை விட்டு விரட்டச் செய்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் நேருவின் வாய் மதம் கண்டு கழகம் தொடுத்த இரயில் நிறுத்தப் போராட்டம், திராவிட மக்களின் தன்மான உணர்வு எத்தகையது என்பது நேருவிற்கு மட்டுமேயல்லாது, வடவர் அனைவருக்குமே உணர்த்துவதில் வெற்றிபெற்று இருக்கிறது.

கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டத்தில், உடனடி வெற்றியை நாம் எதிர்பார்க்கவில்லை; ஆனால், நாம எதிர்பார்த்த கருத்து பரவலாவதில் தோல்வி ஏற்படாது வெற்றியே கிடைத்திருக்கிறது.

அந்த நிலையில், தடியடி தாங்கவும், சிறையேகவும், மற்றும் கொடிய அடக்குமுறைகளுக்கு ஆளாகவும் திராவிடப் பெருங்குடி மக்கள், என்றும், எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்ற பேருண்மை நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

மக்களாட்சி முறைப்படி இயங்கிவரும் அமைப்பு என்ற பெயருக்கொப்ப, நமது கழகம் புதிய பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுத்து, அவர் ஆணைவழி இயங்கி வருவது, மற்றப் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஓர் அரிய படிப்பினையாகும். நாம் கழகத் துறையில் கடைபிடித்து ஒழுகிவரும் ஜனநாயகம் வெறும் வெளிப்பகட்டல்ல—உள்ளுணர்வுடன் செயல்படுவதாகும் எனக் குறிப்பிடுவது வெறும் தற்பெருமையேயாகும்.

முதல் மாநாட்டைப் போன்றே, நமது இரண்டாவது மாநாடும், அரசியல் வரலாற்றில் இடம்பெறவேண்டிய தன்னிகரற்ற திருப்புமுனையாகும்.

தேர்தலில் கழகம் பங்கு கொள்வதா இல்லையா என்பதில், திராவிடப் பெருங்குடி மக்களின் எண்ணம் எவ்வாறு இருக்கிறது என்பதை அறிய முயல்வது, மக்களாட்சி தத்துவத்திலேயே செயல்படுத்தப்படாத ஒரு புதிய முறையாகும். மக்களாட்சி தத்துவத்தை மேலும் விரிவான அடிப்படையில் அமைப்பதற்கான ஒரு புதிய நடைமுறையை, தனது பங்காக கழகம் அர்ப்பணிக்கிறது. கழக மாநாட்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் மக்கள் எண்ணம் அறியும் புதிய போக்கு, ஜனநாயகம் உண்மையாக தனது முழு ஆற்றலுடன் செயல்படுவதற்காக வகுத்துக் காட்டப்படும் ஆக்கம் அளிக்கும் உயர்ந்த ஏறபாடாகும்.

மாநாட்டின் சிறப்பு இந்த அளவோடு முடிந்துவிடுவதல்ல; அத்தனையும் இங்கு எழுத இயலுமோ?

மாநாட்டின் தலைவர், நமது பெருந்தகை அண்ணாவின் அரவணைப்பும், செயல் திறமும் படைத்த பொதுச்செயலாளர் நெடுஞ்செழியனாவார்.

அவர் தலைமை உரையில், திராவிட மக்களுக்கு வழி காட்டுவார்.

மாநாட்டிற்குமுன் பொதுக் குழு நடைபெறுகிறது.

பொதுக் குழு வகுத்துத் தரும் திட்டத்தைச் சிரமேற்கொண்டு, செயல்படுத்தத் துடித்து நிற்கும் திராவிடப் பெருங்குடி மக்கள், திருச்சியில் கூடுகின்றனர்!

திராவிட நாடு பெற, வெற்றி முரசு கொட்ட, 'திருச்சிக்கு வாரீர்' என்று அழைக்கவும வேண்டுமோ?

ரஷ்யாவின் படைபலம் குறையுமா?

மாஸ்கோ, மே 14—

ரஷ்யாவிடம் தற்போது 45-இலட்சம் படையினர் இருப்பதாக மேற்கு வல்லரசுகள் மதிப்பிடுகின்றன; 175 'டிவிஷன்'கள் தரைப் படைகள் அதனிடம் இருப்பதாகவும், உலகிலேயே இதுதான் மிகப்பெரிய தரைப் படையென்றும் சொல்லப்படுகிறது.

அடுத்த ஆண்டு மே முதல் தேதிக்குள்,இராணுவத்தினரில் 12 இலட்சம் பேரைக் குறைக்கப் போவதாக ரஷ்யா இன்று அறிவித்துள்ளதாம்.

மூன்று விமானப்படை 'டிவிஷன்'கள் உள்பட 63 'டிவிஷன்'களும், கிழக்கு ஜெர்மனியில் தங்கியுள்ள 30,000 இராணுவத்தினரும் கலைக்கப்படக்கூடுமாம்.

மேற்கு நாடுகள் தங்களுடைய படை பலத்தைக் குறைத்தால், ரஷ்யா மேலும் தன் படைபலத்தைக் குறைத்துக்கொள்ளுமாம்.

விஞ்ஞானம் வளருகிறது!

இன்னும் 20 ஆண்டுகளில், சந்திர மண்டலத்திலும், அதற்கு அருகிலுள்ள மற்ற கிரகங்களிலும மனிதர் வாழும் 'காலனி'களை ஏற்படுத்த முடியுமென்று ஜெர்மன் ராக்கெட் நிபுணர் நம்புகிறாராம்!

சென்னை, மே 15—

வடாற்காடு மாவட்டத்தில் ஒரு இடத்திலும், உடுமலைப்பேட்டை, மதுராந்தகம் ஆகிய இடங்களிலும் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கான திட்டங்கள் விரைவாக உருவாகி வருகின்றனவாம்.

என்ன? நிறுவப்படக்கூடுமா?

புதுடில்லி, மே 14—

நெய்வேலியில் நடைபெறும் பழுப்பு நிலக்கரி ஆராய்ச்சித் திட்டம் வெற்றிபெற்றால், சர்க்கார் துறையில், அங்கு சில தொழில்கள் நிறுவப்படக்கூடுமாம்.

மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்கு துணை உற்பத்தி மந்திரி பதிலளிக்கையில், இரசாயன உற்பத்தித் தொழிற்சாலை, நீராவி மின்சார நிலையம்போன்ற தொழிற்சாலைகள் அங்கு நிறுவப்படுமெனக் குறிப்பிட்டார்.

காலக்கிரமத்தில். மண்பாண்டம்—சிமெண்டு—மெழுகு உற்பத்தித் தொழில்களும் அங்கு நிறுவப்படுமென்றும், இவை யாவும் இப்போது நடைபெறும் ஆராய்ச்சியின் முடிவைப் பொறுத்திருக்கிறதென்றும் அவர் சொன்னார்.

தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் கிடைக்கவில்லையாம்!

புதுடில்லி, மே 14—

1956 மார்ச் மாதத்தில்,இந்தியா முழுவதிலும், ஓவர்சியர்கள், சுருக்கெழுத்தாளர்கள், வேகமாக டைப் அடிக்கும் டைப்பிஸ்டுகள், டிராப்ட்ஸ்மன்கள், கம்பௌண்டர்கள், மருத்துவச்சிகள், நர்சுகள், பயிச்சி பெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் போன்ற தேர்ச்சியுள்ள சிப்பந்திகள் விஷயத்தில் பெரும் பற்றுக்குறை இருந்துவந்ததாக, இந்தியாவில் உள்ள வேலையளிப்பு நிறுவனங்களில் வேலை நடவடிக்கைகளின் பரிசிலனையிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

கல்வி யோக்கியதாம்சமுள்ள எஞ்சினீயர்கள், அனுபவம் பெற்ற டாக்டர்கள், கணக்கர்கள், சர்வேயர்கள், சுகாதாரப் பார்வையாளர்கள் ஆகியோர் விஷயத்திலும் பற்றுக்குறை இருந்துவந்தது.

பாய்லர் மேற்பார்வை சிப்பந்திகள், மின்சார சிப்பந்திகள், இயந்திர நுட்ப சிப்பந்திகள், கடைச்சல் வேலை சிப்பந்திகள், டிராக்டர் ஓட்டுபவர்கள், ரோட்ரோலர் ஓட்டுபவர்கள், தேகப் பயிற்சி போதனாசிரியர்கள், போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோர் விஷயத்தில், பல வேலையளிப்பு நிலையங்களில் பற்றுக்குறை நிலைமை நீடித்துவந்தது.

தயாராகிவிட்டதாம்!

புதுடில்லி, மே 15—

சர்க்கார் துறைக்கு ரூ. 4,800 கோடியும், தனியார் துறைக்கு ரூ. 2,300 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக நேற்று மாலை கையெழுத்தாகிவிட்டதாம்

திட்டக் காலத்தில் பணவீக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், போக்கு-வரத்து வசதிகளுக்கு ஏற்ப உற்பத்தித் திட்டங்களை இணக்கமாக நடத்த வேண்டுமென்றும் திட்டக்குழுவில் ஒரு உறுப்பினராக உள்ள கே. சி. நியோகி தெரிவித்திருந்த மாறுபட்ட கருத்துக்களை, திட்டத்தை அமுல் செய்யும்போது நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென குறிப்பு ஒன்று, திட்ட நகலுடன் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

5 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற

ரூ. 26 கோடி செலவில் திட்டம்

புதுடில்லி, மே 18—

இந்தியாவில் உள்ள சுமார் 5 கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைப் பேணுவதற்காக ஆலோசனை 'போர்டு' ஒன்றை நிறுவ டெல்லி சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களுக்காக ரூ 26 கோடி செலவிடவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

இதில் ரூ. 75 இலட்சம்வரை, கிராம கிராமமாகச் சென்று, தீண்டாமைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் வேலைகளுக்குச் செலவிடப்படுமாம்.

சுமார் 40,000 கிணறுகள் வெட்டவும், 40,000 வீடுகள் கட்டவும் திட்டம இருக்கிறதாம். சுமார் 30 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமான கல்வி வசதி முதலியன கிடைக்கவும் ஏற்பாடுகள் உண்டாம்.

புதிய தசாம்ச நாணயங்கள்

அடுத்த ஏப்ரலில் வழங்கப்படும்

புதுடில்லி, மே 13—

"இந்தியாவில், 1957 ஏப்ரல் திங்கள் 1-ந் தேதியிலிருந்து தசாம்ச நாணயங்கள் செலாவணிக்குக் கொண்டுவரப்படும். புதிய நாணயங்கள் வெளியிடப்பட்டதிலிருந்து சுமார் மூன்றாண்டு காலம் வரை, இன்றுள்ள நாணயங்கள் சட்டப்படி மேலும் செலாவணியில் இடம் பெற்று வரும்,"

என்று, இந்தியப் பேரரசினர் வெளியிட்டுள்ள அறிவிப்பு ஒன்றிலிருந்து தெரிய வருகிறது.

அந்தத் தேதியிலிருந்து, ரூபாய் நாணயம், 100 சமபாகங்களாகப் பிரிக்கப்படும்; அந்த ஒவ்வொரு சமபாக நாணயமும் 'நயா பைசா' (புதிய நாணயம்) என்று அழைக்கப்படும்.

இவ்விதமாக 100 'நயா பைசா'க்கள் கொண்டது ஒரு ரூபாய். ஒரு ரூபாயின் மதிப்பு இன்றுள்ளது போன்றே இருந்துவரும்.

புதிய நாணயங்கள் கீழ்க்கண்டவாறிருக்கும் :—

1 பைசா, 2 பைசா, 5 பைசா, 10 பைசா, 25 பைசா, 50 பைசா, 100 பைசா.

மேற்கண்ட புதிய நாணயங்களில், தற்போதுள்ள 2, 1, $\frac{1}{2}$, $\frac{1}{4}$ - அணாக்களுக்கு நிகரான மதிப்புள்ள நாணயங்கள் கிடையாது; ஆனால் அவற்றின் மதிப்பீடுகளில் முறையே 10, 5, 2, 1 'நயா பைசா' நாணயங்கள் இருக்கும்.

இன்றுள்ள $\frac{1}{4}$, $\frac{1}{2}$, 1 ரூபாய் நாணயங்கள், தற்போதைய நாணய முறைக்கும், புதிய நாணயமுறைக்கும் ஒருங்கே பொதுவாக மேலும் இருந்துவரும்—அதாவது, பின்வரும் விகிதத்தில் இருக்கும் :—

25 'நயா பைசா'க்கள் 4 அணாவுக்குச் சமம்; 50 'நயா பைசா'க்கள் 8 அணாவுக்குச் சமம்; 100 'நயா பைசா'க்கள் 1 ரூபாய்க்குச் சமம்.

பொதுமக்கள் சரியானபடி புரிந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கும் பொருட்டு அந்த நாணயங்களிலேயே அத்தகைய நாணயங்கள் எத்தனை சேர்ந்தால் ஒரு ரூபாய் ஆகுமென்று குறிப்பிட்டுக் காட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

100, 50, 25 'நயா பைசா'க்கள் ஆகிய நாணயங்கள் தனி நிக்கல் நாணயங்களாக இருக்கும். 10, 5, 2 'நயா பைசா' நாணயங்கள் செம்பு - நிக்கல் கலப்பு உலோக நாணயங்களாக இருக்கும். (செம்பு 75 சதவிகிதம்—நிக்கல் 25 சதவிகிதம்); ஒரு 'நயா பைசா' வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கும்.

பொதுமக்களுக்குப் புதிய நாணயங்களை உபயோகிப்பதில் நல்ல பழக்கம் ஏற்பட்டு, போதிய அளவில் புதிய நாணயங்கள் செலாவணிக்குக் கிடைத்த பிறகு தற்போதைய 'வாபஸ்' பெறப்படும்; இப்போதுள்ள நாணயங்கள் 1957 - ஏப்ரல் 1-ந் தேதிக்குப் பிறகும்கூட செலாவணி நாணயங்களாகவே இருக்கும்; இந்த நாணயங்களைத் திரும்பப் பெறுவதற்கு சுமார் மூன்று ஆண்டுக் காலம் பிடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே, புதிய நாணயங்கள் 'புழக்க'த்திற்கு வரும்போது, தற்போதுள்ள நாணயங்களின் மதிப்பு எந்த அளவில் நின்றுவிடுமோ என் எவரும் அச்சங் கொள்ளத் தேவையில்லை."

சோ[illegible]

புதுடில்லி, மே 15—

'அம்பர் சர்க்கா' திட்டத்தின் மூலம் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை, இப்போது முன்கூட்டியே சொல்வதற்கு இயலாதாம்!

மக்கள் சபையில் இதுபற்றிய கேள்வி ஒன்றுக்கு திட்ட இலாகா துணை அமைச்சர் பதிலளிக்கையில், அதுபற்றி இப்போது நடைபெற்றுவரும் நுணுக்கச் சோதனைகள் முடிந்த பிறகுதான் அதைக் கூற முடியுமென்று குறிப்பிட்டுள்ளார்.

'அம்பர் சர்க்கா' மூலம் 50 இலட்சம் நூற்பாளர்கள்—பஞ்சடிப்பவர்களுக்கும், ஏராளமான நெசவாளர்—தச்சர் — கருமார்களுக்கும் வேலை கிடைக்குமென கதர் போர்டு மதிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியதாகும்.

ஆசிரியர் சம்பள உயர்வு

சென்னை சர்க்கார் நிலை

சென்னை, மே 15—

ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவது சம்பந்தமாக, அகில இந்திய அடிப்படையில் வகுக்கப்படும் ஒரேவிதமான ஏற்பாட்டிற்கு இணங்குவதற்குத் தயாராக இருப்பதாக சென்னை சர்க்கார், இந்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறதாம்.

மத்திய சர்க்கார் தெரிவித்திருந்த யோசனையைக் கொள்கையளவில் மாகில சர்க்கார் ஒப்புக்கொண்டதாம்.

சம்பள உயர்வினால் ஏற்படக்கூடிய அதிகச் செலவில் பாதியை மத்திய ஆட்சியினர் ஏற்றுக்கொள்வர்; ஆனால், மத்திய சர்க்காரின் உதவித் திட்டத்தின் விவரங்களைத் தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மர ஆராய்ச்சிச்சாலை நிறுவப்படுமா?

சென்னை அரசினர் முயற்சி

சென்னை, மே 14—

மர ஆராய்ச்சிச்சாலை ஒன்றை நிறுவ சென்னை அரசினர் நிர்மானித்துள்ளனர் எனத் தெரிகிறது. பிரபலமில்லாத மரவகைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு அவைகளைப் பாதுகாப்பதற்கான வழிகள் கண்டு பிடிக்கப்படுமாம்.

ஆற்றோரத்திலும், கடற்கரையோரத்திலும் உள்ளபாசனநிலங்களில், மணல் வந்து குவிவதைத் தடுப்பதற்காக சவுக்கு மரங்கள் நடப்படுமாம்.

கிழக்கு மதுரை, செங்கற்பட்டு, திருச்சி பகுதிகளில் மொத்தம் 4,900 ஏகர் நிலங்களில் இம்மரங்கள் நடப்படுமாம்.

தேக்கு, மற்றும் உறுதியான 'வைரம் பாய்ந்த' மரங்களை மேற்கு பகுதிகளிலும், கோவை, சேலம் மாவட்டங்களிலும் நட நிர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

மேலும் ஓர் முன்னேற்றம்!

மாஸ்கோ, மே 14—

இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில், சோவியத் யூனியனிலுள்ள காவல் முகாம்கள் எல்லாம் எடுபட்டு விடுமாம்!

எதிர்காலத்தில், சாதாரணச் சிறைகள், கைதிகள் சீர்திருத்தக் காலனிகள் ஆகிய இரண்டு மட்டுமேதான் இருக்குமாம்!

இனி, கைதிகள் சீர்திருத்த முகாமில் தொழிற்சாலைகள் இருக்கும்; கைதிகள் அங்கு பணியாற்றுவர்.

புற்றுநோயை அதிகரிக்கும் வாயு!

மோட்டார் காரிலிருந்து வெளிப்படும் 'பெட்ரோல் கலந்த வாயு,' சுவாசப் பை புற்று நோய் மரணத்தை அதிகப்படுத்துவதாக அமெரிக்க நிபுணர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநில மாநாடு

திருச்சிராப்பள்ளி

நிகழ்ச்சி நிரல்:

17—5—56 வியாழன்:

காலை 9-00—ஊர்வலம் துவக்கம் [திருச்சி சிந்தாமணியிலிருந்து 'வள்ளுவர் நகரு'க்கு]

பகல் 1-00 — கொடியேற்று விழா: மாநாட்டுத் தலைவர்.

" 1-30 } மாலை 4-00 } — இடைவேளை

" 4-00—'புத்தர் வரலாறு' —வில்லுப் பாட்டு: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

" 5-00 — கண்காட்சித் திறப்பு விழா: துணைப் பொதுச்செயலாளர் தோழர் என்.வி. நடராசன்

" 5-30 — இன்னிசை அரங்கு: நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

" 6-30 — நாதசுர இசை அரங்கு: இசைப் பெரும் புலவர் திருவாவடுதுறை இராசரத்தினம்.

இரவு 8-00—விருது வழங்குதல்: மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் அவர்களுக்கு; அறிஞர் அண்ணா பாராட்டுரை.

" 8-30 } 10-00 } —இடைவேளை

" 10-00—'புது வெள்ளம்' நாடகம்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

18—5—56 வெள்ளி:

காலை 7-30 } " 8-30 } — பிரதிநிதிகள் கூட்டம்

" 9-00—இன்னிசைஅரங்கு இசைமுரசு அனீபா.

" 10-00— " இசைச்செல்வி ஜி.கஸ்தூரி

" 11-00 — துவக்கவுரை: தோழர் ஜி. பி. சோமசுந்தரம்.

" 12-00 — வரவேற்புரை: தோழர் அ. பெ. தருமலிங்கம்.

பகல் 1-00 } மாலை 3-00 } — இடைவேளை

" 3-00—இன்னிசை அரங்கு: தென்காசி முத்துசாமி.

" 3-30—இசைக் குயில் பி. எஸ். செல்வா.

" 4-30—தலைவரை முன்மொழிதல்.

" 4-45— " வழிமொழிதல்

" 6-00 — தலைவர் முன்னுரை: இரா. நெடுஞ்செழியன், எம. ஏ.,

இரவு 8-00 } " 9-00 } - இடைவேளை

" 9-00—உடற்பயிற்சி: பொன்னு உடற் பயிற்சிக் கழகத்தார்.

" 10-00—'மணி மகுடம்' நாடகம்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

19—5—56 சனி—காலை 9 மணி:

சிறப்புச் சொற்பொழிவுகள்:

1. 'விடுதலைக் கிளர்ச்சிகள்' —கே. ஏ. மதியழகன் பி. ஏ.
2. 'தொழிலியல் புரட்சி' —காஞ்சி-கல்யாணசுந்தரம்
3. 'உரிமைக் கிளர்ச்சிகள்' —அருண்மொழி பி. ஒ. எல்.
4. 'ஜனநாயகம்' —கி. மனோகரன் பி. ஏ. (ஆனர்ஸ்)
5. 'கல்வித் திட்டம்' —வி. ஜி. இராசையா பி. ஏ. எல். டி.
6. 'நாட்டுப் பணியில் மாணவர் பங்கு' —தில்லை-வில்லாளன்
7. 'தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்' —க. அன்பழகன்
8. 'தனி நாடு அமைப்பும் பொருளாதார வசதிகளும்' —என். எஸ். இளங்கோ
9. 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' —மு. கருணாநிதி

நண்பகல் 1-30—மாலை 3-30 இடைவேளை

10. 'தாய்க்குல வரலாறு'—சத்தியவாணிமுத்து
11. 'மொழிப் பிரச்சினைகள்' — கண்ணதாசன்
12. 'கலையில் கருத்துப் புரட்சி'—சி. பி. சிற்றரசு
13. 'தத்துவ வரலாறு' — டி. கே. சீனிவாசன்
14. 'புத்தர் நெறி' — ஏ. வி. பி. ஆசைத்தம்பி
15. 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' —அரங்கண்ணல்
16. 'உலக அமைதி' — ப. உ. சண்முகம்
17. 'மறைந்த இயக்க மாவீரர்கள்' —என். வி. நடராசன்
18. 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்' —ஈ. வெ. கி. சம்பத்

இரவு 8-30—10-00 இடைவேளை

" 10-00 'அட்வகேட் அமரன்' நாடகம் —எம்.ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

20—5—56 ஞாயிறு:

காலை 7-30 } " 8-30 } —பிரதிநிதிகள் கூட்டம்

" 9-00—தீர்மானங்கள் நிறைவேற்றல்

பகல் 1-30 | மாலை 3-30 | - இடைவேளை

" 3-30—தீர்மானங்கள் நிறைவேற்றல்

" 6-00—அறிஞர் அண்ணா சிறப்புரை

இரவு 7-30 -தலைவர் முடிவுரை

" 8-00—நன்றியுரை

" 8-30 | " 10-00 | - இடைவேளை

" 10-00— 'சுமை தாங்கி' நாடகம்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

★

குறிப்பு: பொதுத்தேர்தல் குறித்துத தி. மு. கழகத்தின் முடிவு எதுவாக இருக்க வேண்டும் என்பதுபற்றி, மாநாட்டிற்கு வருகைதருவோரின் கருத்து,வாக்குரிமைச் சீட்டுமூலம் 19—5—56 காலை 6-மணியிலிருந்து மாலை 6-மணிக்குள் அறியப்படும்.

எம். எஸ். மணி, எஸ். முத்து—செயலாளர்கள்

அ. பெ. தருமலிங்கம்—வரவேற்புக்குழுத் தலைவர்

மாநாட்டுப் பந்தலில் கிடைக்கும்!

"மனிதர்களை மிருகங்களாக்குவதல்ல சுயமரியாதை இயக்கம்; மிருகங்களை மனிதர்களாக்குவதுதான்!"

★

அறிவுலக எழுச்சிப் பின்னணியில் உருவான உன்னத ஓவியம்!

கற்பனைச் சிதறல்களிடையே மின்னிய கற்பனைக் காவியம்!

★

தோழர் டி. கே. சீனிவாசன்

உருவாக்கிய

'ஆடும் மாடும்'

'பொன்னி'யில் தொடர்கதையாக வெளிவந்த புதுமைச் சித்திரம்—புத்தகமாக வெளிவந்திருக்கிறது இப்பொழுது!

☆

பாது சகோதரர்களால் இந்நின்றே தயாரிக்கப்பட்ட நெஞ்சில் பதியும் முகப்புச் சித்திரத்தோடு

240 பக்கங்கள் விலை ரூ. 2—8—0

விபரங்களுக்கு:

அறிவு நூல் நிலையம்—405, பெரிய கடைவீதி, திருச்சி.

சுதந்திரம் பெறச் சென்ற சிங்கப்பூர் முதலமைச்சர் ஏமாற்றமடைந்தார்?

மூன்று வாரப் பேச்சு வார்த்தைகள் முறிந்துவிட்டனவாம்!

பதவியிலிருந்து விலகிவிட மார்ஷல் முடிவு?

லண்டன், மே 16—

பிரிட்டிஷ் காலனியாக இருந்துவரும் சிங்கப்பூருக்கு சுதந்திரம் அளிப்பது சம்பந்தமாக இங்கு மூன்று வாரங்களாக நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகளில் இணக்கம் ஏற்படாமல் முறிந்துவிட்டதால், சிங்கப்பூர் முதலமைச்சர் டேவிட் மார்ஷல் தம் பதவியிலிருந்து விலகிவிடுவதாக அறிவித்துள்ளார். அவருடன் லண்டன் சென்றிருந்த தூதுக்குழுவினரும் மார்ஷலின் கூட்டு அமைச்சர் அவையினரேயாதலின், அவர்களும் தங்கள் பதவியிலிருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளனராம்.

பேச்சு வார்த்தையில், சிங்கப்பூர் சார்பில் 13 பேர் கொண்ட குழுவினரும், பிரிட்டிஷ் தரப்பில், பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு அமைச்சர் ஆலார் லெனாக்ஸ் பாய்டும் கலந்துகொண்டனர்.

பிரிட்டிஷ் காமன்வெல்த்துக் குட்பட்ட உரிமை பெற்ற நாடாக சிங்கப்பூர் ஆகிவிட்ட பிறகு, உள்நாட்டுப் பாதுகாப்பு விவகாரப் பொறுப்பு சிங்கப்பூரைச் சேர்ந்ததா, பிரிட்டனைச் சேர்ந்ததா என்பதைப் பற்றிய பேச்சில் இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் ஏற்படவில்லை. எனவே, பேச்சு வார்த்தை ஒரு முடிவுக்கும் வாராமல் முறிந்தது.

பிரிட்டன் கூடியவரை விட்டுக் கொடுக்க விரும்புவதாகவும், இத்துறையில் இணக்கம் காண முயற்சி எடுத்துக்கொள்ளத் தயாராயிருப்பதாகவும், பிரிட்டிஷ் அமைச்சர் கூறியுள்ளார்.

பி. அண்டு சி. ஆலைத்

தொழிலாளருக்கு வேண்டுகோள்

சென்னை, மே 16—

"சென்னை பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்கள், திருச்சியில் நாளை நடைபெறும் மாநில மாநாட்டு ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காகவென்று, திருச்சி புகைவண்டி நிலையத்தில், நாளை காலை 6 மணிக்குத் திரண்டு கூடுமாறு வேண்டுகிறேன்; ஊர்வலத்தில் அனைவரும் கலந்துகொள்ள விழைகிறேன்"

என்று, தோழர் சு. பாலன் (பி. அண்டு சி. மில்) அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.